# <u>முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்</u>

## முஸ்லிம் தர்ம நிதியத்திலிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

இலங்கை வக்ப் சட்டத்தின் VIம் ஷரத்தின் 43,44, மற்றும் 45ம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கை வக்ப் சபையினால் நிர்வகிக்கப்படும் முஸ்லிம் தர்ம நிதியத்தினூடாக முஸ்லிம் சமூகத்தின் **வறுமை ஒழிப்பு, சமூக பொருளாதார மேம்பாடு, கல்வி அபிவருத்தி மற்றும் சுகாதார ஊக்குவிப்பு நடவடிக்கை** போன்றவற்றுக்கு உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வருவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தனி நபர்கள்

   மேற்படி முஸ்லிம் தர்ம நிதியத்தினூடாக அரச தொழில் பயிற்சி நிறுவனங்களில் (Government Vocational Training Institution) தொழில் பயிற்சி நிகழ்ச்சிகளில் ஈடுபடுதற்கு அல்லது வியாபார நோக்கத்துடனான வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சிகளை மேற்கொள்ள ஆர்வமுள்ள ஆண் பெண் இருபாலாரும் இத்திட்டத்திலிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

   **தகைமை**

   i. 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாயல் ஒன்றின் அங்கத்தவராகவும் இருத்தல் வேண்டும்.
   ii. பெண் தலைமை தாங்கும் குடும்பப்பெண்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

   **சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

   i. உறவு முறை சாராத நபர் (Non-related referee) ஒருவரினால் வழங்கப்பட்ட சிபாரிசு கடிதம். பாடசாலை அல்லது தொழில்நுட்பக் கல்லூரி அதிபரினால் வழங்கப்படும் சிபாரிசுக் கடிதம் விரும்பத்தக்கது.
   ii. பள்ளிவாயல் சிபாரிசுக் கடிதம்.
   iii. சிறு தொழில் முயற்சிகளுக்கான விண்ணப்பங்களின் போது குறித்த முயற்சிக்கான உத்தேச செலவினம் தொடர்பான அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

2. பள்ளிவாயல்கள்

   முஸ்லிம் சமூகத்தின் **வறுமை ஒழிப்பு, சமூக பொருளாதார மேம்பாடு, கல்வி அபிவிருத்தி மற்றும் சுகாதார ஊக்குவிப்பு நடவடிக்கை** ஆகிய நான்கு பகுதிகளில் ஈடுபாடு காட்டுகின்ற இலங்கை வக்ப் சபையில் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாயல்கள் விண்ணப்பிக்கலாம்.

   தகைமை

   i. இலங்கை வக்ப் சபையில் பதிவு செய்யப்பட்டிருப்பதோடு சட்ட அந்தஸ்த்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்தின் பிரதி இருத்தல் அவசியம்.
   ii. இலங்கை வக்ப் சபையினால் வழங்கப்படும் நிதியை நேரடியாக பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட வங்கிக் கணக்கிலக்கம் இருத்தல்.
   iii. தெரிவு செய்யப்பட உள்ள விணணப்பங்களுக்கு வக்ப் சபையுடன் இணைந்து நிதி உடன்படிக்கைக்கு மையெழுத்திடும் பள்ளிவாயல் பிரதிநிதியாக இருக்கவேண்டும்.

iv. விண்ணப்பிக்கும் பிரதான விண்ணப்பதாரி குறைந்தது கடந்த 6 மாதம் தொடக்கம் 2 வருட காலப்பகுதிக்குள் மேற்படி நிதி நிகழச்சித்திட்த்தோடு ஒன்றிணைந்து செல்லக்கூடிய திட்டங்களில் ஈடுபட்டமைக்கான உறுதியான ஆதாரங்களை வழங்குதல் வேண்டும்.

v. சிறு தொழில் முயற்சிகளுக்கான விண்ணப்பங்களின் போது குறித்த முயற்சிக்கான உத்தேச செலவினம் தொடர்பான அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

vi. விண்ணப்பிக்கும் பள்ளிவாயல் சமூக செயற்திட்டங்களில் எய்தப்பட்ட அடைவுகள் மற்றும் நிதி பரிபாலனம் தொடர்பான விடயங்களை கையாண்ட விதம் ஆகியவற்றை சான்றுப்படுத்தும் ஆதாரங்கள் இருத்தல் அவசியம்.

vii. பெண்களுக்கான சமயவழிபாட்டு வசதிகளை ஸ்தாபிப்பது தொடர்பபான கட்டுமாணம் அல்லது புனர் நிர்மாணம் மற்றும் சுகாதாரம் அல்லது கல்வி விருத்தியோடு தொடர்பான விடயங்களை நிரூபிக்கக்கூடிய வகையில் ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அவை கருத்திற்கொள்ளப்படும்.

**சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

i. பள்ளிவாயல் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றிதழ்.
ii. நிர்வாக கட்டமைப்பு.
iii. நம்பிக்கையாளர்களின் தொடர்பு இலக்கங்கள்.
iv. முன்னேற்ற அறிக்கை.
v. வங்கிக் கணக்கு விவரங்கள்.

**குறிப்பு:**

திணைக்கள அல்லது ஏனைய அரச/அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து உதவித்தொகையை பெறாதவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**விண்ணப்பிக்கும் முறை**

1. மேற்படி உதவியைப் பெற விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை திணைக்கள தலைமைக் காரியாலயத்தில் அல்லது பின்வரும் திணைக்கள இணையத்தல முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் (http://muslimaffairs.gov.lk).
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2019.02.28 அன்று அல்லது அதற்கு முன்னர் **“ பணிப்பாளர், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இல. 180, டி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு – 10”** என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் இடப்பட்டு அனுப்பப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“முஸ்லிம் தர்ம நிதியத்திலிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்”** என்று குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்

**தகவல்**
**பணிப்பாளர்**
**முஸ்லிம் பள்ளிவாயல்கள் மற்றும் தர்ம நம்பிக்கை நிதியம்**